**தேர்ச்சி : உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக (வரைவியல்) "கிராபிக் ஆக்கங்கள் படைப்பார்"**

**தேர்ச்சி மட்டம் : சிறுவர் கதைப் புத்தகமொன்றிற்குப் பொருத்தமான முகப்பு அட்டையை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு : 'சிறுவர் கதைப் புத்தகமொன்றிற்குப் பொருத்தமான முகப்பு அட்டையை நிர்மாணிப்போம். '**

**ஒப்படை : பின்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுக.**

01. உங்கள் வீட்டிலுள்ள சிறுவர் கதைப்புத்தகங்கள் சிலவற்றை பெற்றுக்கொள்ளுங்கள்.

02. நீங்கள் பெற்றுக்கொண்ட சிறுவர் கதைப்புத்தகங்களில் காணப்படும் முகப்பு அட்டையின் திட்டமைப்பு, உருவங்கள், வர்ண உபயோகம், எழுத்துருக்கள் தொடர்பாக நன்கு அவதானியுங்கள்.

03. நீங்கள் அவதானித்தவற்றைக் கொண்டு உங்களுக்கு தெரிந்த சிறுவர் கதையொன்றுக்கான உரிய தொனிப்பொருளுக்கு ஏற்றதாக பெயர், உருவங்களை வடிவமைத்தல், வர்ண பிரயோகம், அளவு என்பவற்றைக் கொண்டு தயாரித்துக்கொள்க.

04 சுவட்டுப்பிரதித் தாள்களை உபயோகித்து வரைதற் தாளில் அதனை பிரதியிட்டுக் கொள்க

05 நீங்கள் பிரதியிட்டுக் கொண்ட சிறுவர் கதைப்புத்தக முகப்பிற்கு பின்னணியில் இருந்து எழுத்துருக்கள் தெளிவாகத் தெரியும் விதத்தில் பொருத்தமான வர்ணங்களை தீட்டிக்கொள்க.